RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 18 | ஜனவரி.24 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “பாஜக கூட்டணிக்கு தமிழகம் எப்போதுமே தோல்வியைத்தான் தரும்” மோடி ட்வீட்டுக்கு ஸ்டாலின் பதிலடி!

சென்னை: ஜன.24-

“தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே. தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பாஜக கூட்டணிக்கு தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்” என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தேசிய ஜனநாயக கூட்டணியின் துரோகங்களை தமிழகம் நினைத்துப் பார்க்கிறது. தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே. தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் சமக்ர ஷிக்ஷா (SamagraShiksha) கல்வி நிதி எப்போது வரும்?.

மக்களவைத் தொகுதி மறுவரையறையின் கீழ் தமிழ்நாட்டின் தொகுதிகள் குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில் இருந்து எப்போது வரும்?. பா.ஜ.க.வின் முகவர்போல் செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?. தமிழ்ப்பாசத்தில்





தமிழர்களை மிஞ்சியதாய்க் காட்டிக்கொள்ளும் உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தொடரும், மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் விபி ஜிராம்ஜி கைவிடப்படும் என வாக்குறுதி எப்போது வரும்?.

பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பாஜக அரசு இழைத்து வரும் மதுரை எய்ம்ஸ் எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்?. இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?.

ஓசூர் விமான நிலையம், கோவை - மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது ஒப்புதல் வரும்?. கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்?.

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான கோரிக்கையான நீட் விலக்கு எப்போது அமலுக்கு வரும்?. தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பாஜக கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்” எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இதுகுறித்து பிரதமர் மோடி தமிழில் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது. மதுராந்தகத்தில் இன்று பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுடன் கலந்து கொள்ள இருக்கிறேன்.

ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன” எனத் தெரிவித்திருந்தார்.

## “ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது” பிரதமர் மோடி

சென்னை, ஜன.24-

“ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது. தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது” என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து பிரதமர் மோடி தமிழில் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது. மதுராந்தகத்தில் இன்று பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுடன் கலந்து கொள்ள இருக்கிறேன்.

ஊழல் திமுக அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன” எனத் தெரிவித்துள்ளார்.

இன்று செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இந்த பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்ட தேஜகூட்டணி தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

## அசுத்தமான குடிநீரால் இந்தூரில் 22 பேருக்கு உடல்நல பாதிப்பு: மீண்டும் அதிர்ச்சி

இந்தூர், ஜன.24-

மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில், அசுத்தமான குடிநீரால் 23 பேர் உயிரிழந்தும், பலர் உடல்நலம் பாதிக்கப்பட்டும் சில வாரங்களே ஆன நிலையில், தற்போது மீண்டும் அசுத்தமான நீரைக் குடித்ததால் 22 பேர் நோய்வாய்ப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.



இந்தூரின் மஹோவ் பகுதியில் அசுத்தமான குடிநீரைக் குடித்ததால் 22 பேர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ள நோயாளிகள் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் வீடுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹோவ் மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளிலும் சிலர் அசுத்தமான குடிநீரால் பாதிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25ஐ தாண்டக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து புகார்கள் வெளிவரத் தொடங்கியதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் நேற்று இரவு இதற்கான நடவடிக்கையில் இறங்கியது. மாவட்ட ஆட்சியர் சிவம் வர்மா நோயாளிகளைச் சந்திக்க மருத்துவமனைக்குச் சென்று, மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டார்.

மேலும், பல்வேறு சுகாதாரக் குழுக்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட சுற்றுப்புறங்களில் உள்ள நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாத தொடக்கத்தில் இந்தூரில் அசுத்தமான குடிநீரால் பாதிக்கப்பட்டு சுமார் 25 பேர் உயிரிழந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். ஆனால், அதிகாரப்பூர்வ தரவுகளின்படி இறப்பு எண்ணிக்கை 15 என அரசு தரப்பு தெரிவித்தது. குடிநீர் மாசுபாட்டிற்கான காரணங்களை விசாரிக்கவும், இது மீண்டும் நிகழாமல் தடுக்க பரிந்துரைகளை வழங்கவும் அரசாங்கம் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்தது.

இந்த விவகாரம் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்திலும் விசாரணையில் உள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 21 பேரின் குடும்பங்களுக்கு அரசு தரப்பில் தலா ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலை பராமரிப்பு குழு ஏற்பாட்டில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது: சி. ஆர்.சுந்தரராஜன் பங்கேற்பு


சிவகங்கை, ஜன.24-

சிவகங்கையில் சுபாஷ் சந்திரபோஸ் 1897 வருடம் ஜனவரி 23 ந்தேதி பிறந்தவராவார், இவரது சுதந்திர போராட்ட தியாகங்களை குறிக்கும் வண்ணம் சிவகங்கை நகரின் மையப்குதியான அரண்மனை வாயில் முகப்பு பகுதியிலேயே இவருக்கு 1946 ஆம் ஆண்டு சிலை ஒன்று அமைக்கப்பட்டது.

1946 ல் தியாகி கே. சுந்தரராஜன் என்பவரால் நிறுவப்பட்ட இந்த சிலையை கடந்த 2004 ல் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



மீண்டும் பச்சேரி சி. ஆர். சுந்தரராஜன் அவர்களால் மறுசீரமைப்பு செய்யப்பட்டு , பராமரிக்கும் குழுவினர் ஏற்பாட்டில், இவரது 129 வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டும் பொதுமக் களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது.



பிறந்தநாள் விழாவின் முன்னதாக சிவகங்கை நகர் விவேகானந்தர் பள்ளியில் தலைமையாசிரியர் ஜோதியை ஏற்றி வைத்து பின்னர் அதைப் பெற்றுக் கொண்டு மாணவர்கள் ஜோதியை ஊர்வலமாக எடுத்துவந்தனர்... இதனிடையே, சுபாஷ் சந்திர போஸ் சிலைக்கு வந்த ஜோதியை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் பச்சேரி சி. ஆர். சுந்தரராஜன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

சிலையருகே இருந்த கொடிக்கம்பத்தில் தலைவர் பகீரத நாச்சியப்பன் ஏற்றி வைத்து பள்ளி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் பச்சேரி சி. ஆர். சுந்தரராஜன் பங்கேற்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நல்லாசிரியர் பகீரத நாச்சியப்பன் , சிலை பராமரிப்பு குழு செயலாளர் பொன். பாலசுந்தரம் , பொருளாளர் ,சிவகங்கை காங்கிரஸ் மாவட்ட சிறுபான்மையினர் அணி தலைவர் மஹாராணி எம். ஆர். சையது இப்ராஹீம் , காங்கிரஸ் கட்சி பொதுக்குழு உறுப்பினர், வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்க பட்டயத் தலைவர் ஸ்ரீவித்யா கணபதி , குமரன் மெஸ் ஏ. சிதம்பரம் , நகர்மன்ற உறுப்பினர், திமுக மாவட்ட செய்தித் தொடர்பாளர் அயூப் கான் , நேரு யுவகேந்திரா நேதாஜி ஃபவுண்டேஷன்ஸ் ஜவஹர் , நகர் திமுக இலக்கிய அணி அமைப்பாளர் , தாளாளர் முத்துக்கண்ணன் , ஜகுஃபர் சாதிக் , ராம் பிரபாகர் , ரெட்ரோஸ் பழனிச்சாமி , செல்வநாதன் , முத்துராஜா , முத்துப்பாண்டி , ஜெயப்பிரகாஷ் , எஸ். கே. எஸ். குமார், அரிமா சங்கத் தலைவர் ரமேஷ் கண்ணன் ,செயலாளர் துரைப்பாண்டி , பொருளாளர் செந்தில் குமார் , ரெங்கநாதபுரம் அசோக் மேத்தா , எஸ். எம். பில்டர்ஸ் சுந்தரமாணிக்கம் , சுவாமி விவேகானந்தர் பள்ளி தலைமையாசிரியர் சுதாகர் , தியாகபூமி , முரளீதரன் , லெட்சுமணன் , சாய்குரு கணேஷ் ஸ்டிக்கர்ஸ் , ஸ்தபதி மணிகண்டன் , சங்கரராஜா , உள்ளிட்ட நகர் காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலை பராமரிப்புக் குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## ஜல்லிக்கட்டு போட்டி விதிகளை தளர்த்தியது தமிழக அரசு!

சென்னை, ஜன.24-

ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துவதில் உள்ள சிரமங்களை களையும் பொருட்டு, ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான விதிமுறைகளில் சில தளர்வுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது.



இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில் பாரம்பரிய வீர விளையாட்டான ஏறுதழுவுதல் என்னும் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

ஜல்லிக்கட்டுக்காகவே மதுரை அலங்காநல்லூரில் “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்” அமைக்கப்பட்டு அனைவரும் பெருமைகொள்ளும் வகையில் அங்கே ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது.

17 01 2026 அன்று அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று அதிகக் காளைகளை அடக்கிச் சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறையில் உரிய அரசுப் பணியிடங்களில் பணியமர்த்திட வழிவகை செய்யப்படும் என்றும், உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டுக் காளைகளுக்கான சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும் என்றும் இரண்டு சிறப்பான அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

மேலும், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதில் இருக்கும் ஒரு சில சிரமங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவற்றைப் பரிசீலித்து காளைகளுக்கு எவ்வித துன்பமும் நேராவண்ணமும், ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு இடையூறு இல்லாத வண்ணமும் தமிழ்நாடு அரசு சில தளர்வுகளை வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது.

தளர்வுகள் என்னென்ன?

1. உள்ளூர் காளைகளும், வீரர்களும் பங்குபெறுவதை உறுதி செய்திட ஏதுவாக, ஆன்லைன் பதிவு முறையினை மாற்றி, அந்தந்த மாவட்ட அளவில் முடிவு செய்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

2. போட்டிகளின்போது இறக்க நேரிடும் மாடுபிடி வீரர்களுக்கு உரிய நிவாரணம் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. எனவே, மாடுபிடி வீரர்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டாயம் என்ற விதி தளர்த்தப்படும்.

3. இதுவரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களிடம் முத்திரைத் தாளில் பெறப்பட்டு வந்த உறுதிமொழிப் பத்திரம் என்ற நடைமுறை ரத்து செய்யப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், ஜல்லிக்கட்டு விளையாட்டினைத் தொடர்ந்து ஊக்குவித்திடவும், முதல்வரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ வேலூர் மாவட்டத்தில் சாலை போக்குவரத்து மாத விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி வாலாஜாபேட்டை டோல்வே பிரைவேட் லிமிடெட் சார்பில் பள்ளி பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் லாரி ஓட்டுநர்களுக்ககான இலவச கண் சிகிச்சை முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரிவாலாஜா சுங்கசாவடி செயல்பாட்டு மேலாளர் ஜஸ்டின் சாம்சன், வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தரராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜ்குமார், தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பாலமுருகன், சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு காவல்துறை சார்பில் காவலர்கள் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி தேனியில் SP தொடங்கி வைத்தார்

தேனி, ஜன.24-

தேனி புதிய பேருந்து நிலையத்தில் சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு பொதுமக்கள் மத்தியில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காவல்துறை சார்பில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது இந்த பேரணியை தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் புக்யா சினேகா பிரியா கொடி அசைத்து துவக்கி வைத்தார் இந்த பேரணி தேனி புதிய பேருந்து நிலையத்தில் தொடங்கி மதுரை சாலை வழியாக நேரு சிலை பெரியகுளம் சாலை வழியாக அன்னஞ்ஜி விலக்கு பைபாஸ் சென்று அங்கிருந்து தேனி புதிய பேருந்து நிலையம் வழியாக ஆயுதப்படை மைதானம் சென்று நிறைவு பெற்றது இந்த பேரணியில் காவலர்கள் தங்களது இருசக்கர வாகனங்களில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர் இந்த பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் தங்களது இருசக்கர வாகனத்தில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் இருசக்கர வாகன பேரணியாக சென்றனர்.



## காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் திமுகவில் இணைவு

கிருஷ்ணகிரி, ஜன.24-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்களின் ஆலோசனையின் பேரில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியம் கரடிஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பாமக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் விஜி மற்றும் அதிமுக கிளைச் செயலாளர் முருகன் ஆகியோர் தலைமையில், மாற்றுக் கட்சியினரான சேட்டு, முருகன், சின்னசாமி, கோவிந்தராஜ் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் காவேரிப்பட்டினம் திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் சூரியபிரகாஷ் மற்றும் திமுக நிர்வாகிகள் சங்கர், காசி, பெருமாள், சண்முகம், வடிவேல், முனுசாமி, ஆறுமுகம், செல்வம், மாது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட வன அலுவலர் பகான் ஜெகதீஷ் சுதாகர், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) காளிமுத்து, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் இந்திரா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# "நீங்கள் கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கிறதா?" ஸ்டாலினுக்கு அண்ணாமலை பட்டியல்

சென்னை, ஜன.24-

"திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 10% கூட முழுமையாக நிறைவேற்றாமல், நாளொரு நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறது. இனியாவது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்" என முதல்வர் ஸ்டாலினுக்கு தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை பதிலளித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 10% கூட முழுமையாக நிறைவேற்றாமல், நாளொரு நாடகம் நடத்திக் கொண்டு, நாட்டு நடப்பு என்னவென்றே தெரியாமல், யார் எதை எழுதிக் கொடுத்தாலும், அதை அப்படியே கிளிப்பிள்ளை போல ஒப்பிக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

சமக்ர ஷிக்ஷா (Samagra Shiksha) திட்டத்தின் ஓர் அங்கமான பிஎம் ஸ்ரீ பள்ளிகளை தமிழகத்தில் கொண்டு வருவோம் என்று கடிதம் மூலமாக தெரிவித்துவிட்டு, பின்னர் அந்தர் பல்டி அடித்தது ஏன்? நிறைவேற்றாத திட்டத்துக்கு நிதி எப்படி ஒதுக்குவார்கள்?

தொகுதி மறுவரையறையில் தென் மாநிலங்களில் எந்த தொகுதியும் குறைக்கப்படாது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, கடந்த 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமே தெரிவித்துவிட்டார். உங்களுக்கு செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம் இருக்க வாய்ப்பில்லை. உங்களுக்கு எழுதிக் கொடுப்பவர்களுக்குமா இல்லை?

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு அதலபாதாளத்தில் இருக்கும்போது, ஆளுநர் உங்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் நிர்வாகத் தோல்விக்கு ஆளுநரை குற்றம் சொல்வதை எப்போது நிறுத்துவீர்கள்?

100 நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துவோம் என்று நீங்கள் தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடாமல் இருக்கிறீர்கள். மத்திய அரசு தற்போது அதனை 125 நாட்களாக உயர்த்தி இருக்கிறது. இனிமேலும் அத்திட்டத்தில் உங்கள் கட்சியினரால் ஊழல் செய்ய முடியாது என்ற இயலாமை, உங்களை இப்படி புலம்ப வைத்திருக்கிறது.

எய்ம்ஸ் கட்டுமானம் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. வேங்கைவயலுக்குதான் நீங்கள் போகவில்லை. மதுரைக்குச் சென்று பார்த்திருக்கலாமே? உங்களை யார் தடுத்தார்கள்? நீங்கள் விரும்பவில்லை என்றாலும், இந்த வருடம் மதுரை எய்ம்ஸ், மக்கள் பயன்பாட்டிற்கு வரும். மதுரையில் வேளாண் பல்கலைக்கழகம் அமைப்போம் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கிறதா? குறைந்தபட்சம் ஒரு செங்கல்லாவது வைத்தீர்களா?

இயற்கை பேரிடர்களுக்கான நிதியை மத்திய அரசு விடுவித்துவிட்டது. 5,000 கோடி ரூபாய் செலவு செய்தும், வருடந்தோறும் சென்னையை வெள்ளக்காடாக மாற்றுவதே உங்கள் சாதனை. கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு வேண்டுமென்றே உங்கள் அரசு தவறான DPRஐ வழங்கியது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? திருத்தம் செய்யப்பட்ட DPR-ஐ மீண்டும் சமர்ப்பிக்க எண்ணம் இருக்கிறதா இல்லையா?

கீழடி ஆய்வறிக்கை, உலகளாவிய அளவில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதால், மேலும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் வேண்டும் என்று கேட்கிறது மத்திய அரசு. அந்த ஆதாரங்களைக் கொடுக்க என்ன தயக்கம் உங்கள் அரசுக்கு?

நீட் தேர்வை, தமிழக மக்கள் எதிர்க்கவில்லை. ஏழை, எளிய மாணவர்களுக்கு, நீட் ஒரு வரப்பிரசாதம் என்பதை, ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் எளிய பின்புலம் கொண்ட பெற்றோர்கள் கூறுவார்கள். மருத்துவக் கல்வி இடங்களை விற்று, இத்தனை ஆண்டு காலம் பல கோடி சம்பாதித்த திமுக கும்பலுக்கு மட்டுமே நீட் தேர்வு கசக்கிறது.

ஒரு காலத்தில், தங்களுக்குப் பிடிக்காதவர்கள் குறித்து, பொதுக் கழிவறைகளில் கரித்துண்டால் எழுதி அற்ப சந்தோஷப்படும் மோசமான பழக்கத்தை, ஏஐ காலத்திலும் தொடராதீர்கள் முதல்வர் ஸ்டாலின். இனியாவது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள்' என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மேற்கு பகுதி தேமுதிக சார்பில் எம்ஜிஆர் 109வது பிறந்தநாளை முன்னிட்டு

## திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்



தாம்பரம், ஜன.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி தேமுதிக சார்பில் அதிமுக நிறுவனரும் முன்னாள் முதலமைச்சருமான எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை விழாவை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் மார் க்கெட் ஞானப்பால் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், மத்திய பகுதி கழகச் செயலாளர் என்.ஆர்.ஆனந்த், மாநில முன்னாள் பொது குழு உறுப்பினர் மேற்கு பகுதி நிர்வாகிகள் மேற்கு பகுதி துணைச் செயலாளர் மாலதி, மாவட்டம் மகளிர் அணி செயலாளர் பார்த்திமா ஸ்டெல்லா, மகளிர் அணி நிர்வாகி பானுமதி, பழனிவேல், 60வது வட்டச் செயலாளர் ராகவன், ரமேஷ், தேவராஜ், கவின்குமார் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

## தேவகோட்டை நகராட்சியில் உலர் கழிவுகளில் இருந்து உருவான கலைப்பொருட்கள்: நகர்மன்ற தலைவர் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்

தேவகோட்டை, ஜன. 24-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி அலுவலகத்தில் உலர் கழிவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அழகுப் பொருட்களின் சிறப்புக் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சியைத் தேவகோட்டை நகர்மன்ற தலைவர் சுந்தரலிங்கம் நேரில் தொடங்கி வைத்து, தயாரிப்புகளைப் பார்வையிட்டார்.



கழிவுப் பொருட்களின் மறுபயன்பாடு:

வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் மற்றும் தேவையில்லை என்று தூக்கி எறியப்படும் உலர் கழிவுப் பொருட்களைப் பயனுள்ள கலைப் பொருட்களாக மாற்றுவது குறித்து இக்கண்காட்சியில் விளக்கப்பட்டது. குறிப்பாக:

பயன்படுத்தப்பட்ட காகிதக் குவளைகள் (Paper Cups)

புளியங்கொட்டைகள்

தேங்காய் சிரட்டைகள்

பிளாஸ்டிக் பாட்டில்கள்

போன்ற பொருட்களைக் கொண்டு கார், பூந்தொட்டிகள் மற்றும் சுவர் அலங்காரப் பொருட்கள் நுணுக்கமான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன.

சுயஉதவிக் குழுவினருக்குப் பாராட்டு:

இந்த ஆக்கப்பூர்வமான முயற்சியினை மேற்கொண்ட 'ஆவாரம் பூ' மகளிர் சுயஉதவிக் குழுவினரை நகர்மன்ற தலைவர் வெகுவாகப் பாராட்டினார். "பழைய மற்றும் தேவையற்ற பொருட்களைக் கொண்டு இவ்வளவு அழகான பொருட்களை உருவாக்க முடியும் என்பது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளிக்கிறது; இது ஒரு சிறப்பான திட்டம்" என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்தத் தயாரிப்புகள் குறித்து அருணா என்பவர் விரிவான விளக்கங்களை அளித்தார். பெண்கள் தங்கள் வீடுகளிலேயே கிடைக்கும் தேவையற்ற பொருட்களைக் கொண்டு இது போன்ற கைவினைப் பொருட்களைத் தயாரிப்பதன் மூலம், தங்கள் இல்லங்களை அழகுபடுத்துவதுடன், வருமானம் ஈட்டும் வாய்ப்பாகவும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் துப்புரவு ஆய்வாளர் பாண்டி செல்வம் நகராட்சி பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்

## பல்லாவரம் 13வது வார்டு குடியிருப்போர் நலச் சங்கத்தினர் மற்றும் அனைத்து கட்சியினர் சேர்ந்து பல்லாவரம் தாசில்தார் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தாம்பரம், ஜன.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரம் ரயில்வே நிலையம் அருகே 13 வது வார்டில் அரசுக்கு சொந்தமான இரு சாண்டி சுப்பன் சத்திர குளம், ராமசாமி செட்டிகுளம் இவை 1.96, பாட்டை12சென்ட், காரியமண்டபம் 23செண்ட், கோயில் நிலம் 22செண்ட் ஆகியவற்றை தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளதை எதிர்த்து பல்லாவரம் 13வது வார்டு குடியிருப்போர் நலச் சங்கத்தின் சார்பில் பொதுநல வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது அதன் தீர்வாக கடந்த 9 மாதங்களுக்கு முன்பாக உயர்நீதிமன்றம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தை காலி செய்து ஒப்படைக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்து இதுவரை எந்த நடவேடிக்கையும் எடுக்காத பல்லாவரம் தாசில்தார் மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் ஆகியோரை கண்டித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் அனைத்து கட்சி சார்பில் நடைபெற்றது இதில் பெண்கள் உட்பட 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் இருப்பதற்காக சிட்லபாக்கம் காவல் ஆய்வாளர் கன்னியப்பன் தலைமையில் 20க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர் ஆர்ப்பாட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கை அரசுக்கு சொந்தமாகவும், வாரிசு இல்லாத சொத்துக்களையும் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது இதனை உடனடியாக அரசு ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து இடத்தை மீட்டு அரசு பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டுமென கோரிக்கை விடுத்தனர் இதைக் குறித்து தாசில்தாரிடம் கோரிக்கை மனு வைத்த போது இன்னும் சில தினங்களில் அதனை நாங்கள் மீட்டு தருகிறோம் என வாக்குறுதி கொடுத்தனர் அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றால் அடுத்த கட்டமாக தாம்பரம் ஆர்டிஓ அலுவலகத்தை முற்றுகையிட்டு சாலை மறியலில் ஈடுபடுவதாக தெரிவித்தனர். உயர் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற காலதாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என செய்தியாளர் கேள்வி எழுப்பியதற்கு குடியிருப்பு நல சங்க நிர்வாகி காந்தி அவர்கள் கூறுகையில் காலதாமதம் ஏற்படுவதற்கு காரணம் அரசியல் குறிப்பாக இந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவருடைய சகோதரர் மண்டல தலைவர் ஜோசப் அண்ணாதுரை ஆகிய இருவரும் அரசியலின் காரணமாகவே இதனை காலதாமதம் ஏற்படுத்துகின்றனர்

இப்பகுதி மக்களின் ஐந்து வருட கோரிக் கையை 2024 இல் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி உத்தரவுக்கும் அவர் உத்தரவை இதுவரை நிறைவேற்றவில்லை என குற்றச்சாட்டு அது மட்டுமல்ல உயர் நீதிமன்றத்தில் அமைச்சர் அன்பரசு இந்த வழக்கை நடத்தும் வழக்கறிஞரை இந்த வழக்கை நடத்த வேண்டாம் என எச்சரித்துள்ளார் இதற்கு முக்கிய காரணம் இந்த இடத்தை ஆக்கிரமித்துள்ள நபர்கள் அச்சரத்தின் காரணமாகவே இந்த உயர் நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்படாமல் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது

ஐயனார்,வேலுமணி உள்ளிட்ட நபர்கள் ஆக்கிரமித்து போலி பட்டாக்கள் வாங்கி வைத்திருந்ததை தகுந்த ஆதாரத்துடன் காண்பித்தும் இதுவரை பல்லாவரம் தாசில்தார் மற்றும் தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட திமுகவினர் அச்சுறுத்தி தடுத்து வருகின்றனர்.




# ஜி.ஆர்.ஜி. அறக்கட்டளை நிறுவனர்கள் தின விழா

கோவை, ஜன.24-

ஜி.ஆர்.ஜி. அறக்கட்டளையின் 2026 ஆம் ஆண்டு நிறுவனர்கள் தின விழா, பி.எஸ்.ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியின் பிஎஸ்ஜிஆர்கேசி முன்னாள் மாணவியர் பொன்விழா அரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு ஜிஆர்ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஜி. ரங்கசாமி வரவேற்புரை வழங்கினார். நிறுவன அறங்காவலர் டாக்டர் நந்தினி ரங்கசாமி சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, ஐஏஎஸ், நிகழ்வின் தலைவராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்வின் தலைமை விருந்தினராக ஈரோடு, யுஆர்சி கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தேவராஜன் சின்னுசாமி கலந்து கொண்டு ஜிஆர்ஜி நினைவுப் பேருரை ஆற்றினார்.

தொழில் மற்றும் சமூக சேவையில் சிறந்த பங்களிப்பை பாராட்டி, ரானே (மெட்ராஸ்) லிமிடெட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கௌரி கைலாசத்திற்கு 2026 ஆம் ஆண்டிற்கான சந்திரகாந்தி கேட்டலிஸ்ட் லீடர் விருது வழங்கப்பட்டது.

மேட்ரிமோனி டாட் காம் (பாரத் மேட்ரிமோனி) நிறுவனத்தின் நிறுவனர் முருகவேல் ஜானகிராமனுக்கு ஜிஆர்ஜி டிரெயில்பிளேசர் விருது வழங்கப்பட்டது.

விழாவின் முக்கிய அம்சமாக, பெண்களின் தலைமைத்துவத்தை வளர்க்கும் நோக்கில் சந்திரகாந்தி ஃபெலோஷிப் திட்டம் தொடங்கப்பட்டது. மேலும் பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியின் சிறந்த முன்னாள் மாணவிகள் கே.சி.டபிள்யூ பிராண்ட் தூதுவர்களாக கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வு ஜிஆர்ஜி/ கே.சி.டபிள்யூ ஆலோசகர் பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியன் நன்றியுரையுடன் நிறைவடைந்தது.

# தேசிய பெண் குழந்தைகள் தின விழா - கோவிலூர் நாசியப்பா சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கொண்டாட்டம்

காரைக்குடி, ஜன.24-

கோவிலூர் நாசியப்பா சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 23.01.2026 தேசிய பெண் குழந்தைகள் தின விழா உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியை ஆங்கிலத் துறை ஏற்பாடு செய்திருந்தது.,இந்த நிகழ்ச்சி, கோவிலூர் ஆதீனம் சீர் வளர சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் தொடங்கியது. கல்லூரி செயலாளர் டாக்டர் எம். வீரப்பன் வழிகாட்டுதலில் விழா நடைபெற்றது.,வரவேற்பு உரையை ஆங்கிலத் துறை தலைவர் டாக்டர் எஸ். மதுபாலா வழங்கினார். தொடர்ந்து முதல்வர் டாக்டர் கே. கலா தலைமையுரை நிகழ்த்தினார். அவர் பெண் குழந்தைகளின் முன்னேற்றம் மற்றும் பெண்கள் அதிகாரமடைதல் குறித்து வலியுறுத்தினார்.,சிறப்பு உரையை ஆலோசகர் டாக்டர் ஆர். சந்திரமோகன் வழங்கினார்.






முதன்மை விருந்தினர்களாக அழைக்கப்பட்ட அழகப்பா பல்கலைக்கழக பெண்கள் ஆய்வு துறையைச் சேர்ந்த டாக்டர் பி. சிந்துஜா மற்றும் டாக்டர் வி. சித்ரா,பெண்களின் உரிமைகள், சட்ட விழிப்புணர்வு, சம வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.,நன்றியுரை ஆங்கிலத் துறை பேராசிரியர் எம். முத்துலட்சுமி வழங்கினார். இந்த விழா,மாணவர்களிடையே சமத்துவம், மரியாதை மற்றும் பெண்கள் மேம்பாட்டின் அவசியத்தை எடுத்துரைக்கும் விதமாக அமைந்தது.



# நிலக்கோட்டையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்தநாள் விழா

நிலக்கோட்டை, ஜன.24-

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் அகில இந்திய பார்வர்டு கிழக்கு மாவட்டம் கட்சி சார்பாக இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் இந்திய ராணுவம் உருவாக்கியவருமான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 129 ஆவது பிறந்தநாள் நிலக்கோட்டை மினி பேருந்து நிலையம் அருகில் மாவட்ட கட்டுப்பாட்டு குழு தலைவர் செல்வம் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் நேதாஜி திருவுருவ படத் திற்கு திருவுருவப் படத்திற்கு அபிஷேக, ஆராதனை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடினார்கள். இதில் விழாவில் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட இணைச் செயலாளர் சுவனேஷ் பைரவன், மாவட்ட இளைஞரணி செயலாளர் முத்தையா, மாவட்ட இளைஞரணி தலைவர் குமரேசன், மாவட்ட இளைஞரணி பொருளாளர் இளஞ்செழியன், மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் நாகராஜ் ,நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர் தினகர் ,நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் வாக்காளர் உறுதிமொழி ஏற்பு

காளையார் கோவில், ஜன.24-

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வாக்காளர் உறுதிமொழியை அனைத்து மாணவர்களும் எடுத்துக் கொண்டனர். நாடு முழுவதும் ஜனவரி 25 ஆம் தேதி வாக்காளர் உறுதிமொழி தினம் கொண்டாடப்படுகிறது. சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் காளையார் கோவில் வட்டார கல்வி அலுவலர் திருமதி பொன்னி தலைமையிலும் தலைமை ஆசிரியர் (பொறுப்பு)



சுரேஷ் முன்னிலையிலும், ஆசிரியர்களும், மாணவர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். வட்டார கல்வி அலுவலர் பொன்னி வாக்காளர் தினத்தை பற்றியும் 6 முதல் 8 வகுப்பு மாணவர்களுக்கான திறன் தேர்வின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார். மாணவி லிடிஸ்டினா உறுதிமொழி கூற மற்ற மாணவர்கள் தொடர்ந்து கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தலைமையாசிரியர் சுரேஷ் வாக்காளர் தின உறுதிமொழி என்பது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இந்தியக் குடிமக்களாக, சுதந்திரமான, நியாயமான தேர்தல்களைப் பாதுகாக்கவும், மதம், இனம், சாதி, மொழி, அல்லது பிற தூண்டுதல்களுக்கு ஆட்படாமல் அச்சமின்றி வாக்களிப்போம் என்று உறுதிமொழி ஏற்பதாகும், இது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ஆம் தேதி தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த உறுதிமொழியை அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி எடுத்துக்கொள்கிறார்கள் என்ற தகவலை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




■ தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே டி.கல்லுப்பட்டியில் உள்ள ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி).... வாழ்த்துச் செய்தி வழங்கியவர்கள்: அருட்தந்தை சிஸ்டர் எஸ்.இனாரியா சர்ஹாயா, அன்னை சகோதரி சுப்ரீயர் ஜெனரல், திருச்சிராப்பள்ளி துணைத் தலைவர் சகோதரி ஜோசபின் மேரி அன்னை சுபெபின் மேரிஅம்மா மேற்பார்வையாளர் திருச்சிராப்பள்ளி.. மற்றும் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி செயலாளர், ஆர். சாந்தா மேரி ஜோஷிட்டா ஜே.ஏ. கல்லூரி முதல்வர் டாக்டர் இருதய கலை செல்வம் இலவச J.A. கல்லூரி வாழ்க்கை வரலாறு நேர்காணல் டாக்டர் ஏஞ்சலிவ் சொர்ணா. ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆங்கில பாடத்தின் உதவி பேராசிரியர். ஏ.ஜாக்குலின் ரெஜினா மேரி இயற்பியல் துறை உதவி பேராசிரியை மற்றும் முன்னாள் கல்வியியல் டீன்.மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டானர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், 16வது தேசிய வாக்காளர் தினத்தையொட்டி, தேசிய வாக்காளர் தின உறுதிமொழியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் தலைமையில், அனைத்து துறை அலுவலர்கள் நேற்று எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, உதவி ஆணையர் (ஆயம்) பழனி, உதவி இயக்குநர் (நிலஅளவை) ராஜ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் தேசிய வாக்காளர் தினம் உறுதிமொழி மதிப்பிற்குரிய துணை மேயர் தி.நாகராஜன் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர் அருகில் துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன் , உதவி ஆணையாளர் (பணி) அருணாச்சலம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




# கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகளுக்கு தொல்லியல் மரபு நடைப்பயணம்

கிருஷ்ணகிரி, ஜன.24-

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை தொல்லியல் மரபு மன்றம் சார்பில், மாவட்ட அரசு அருங்காட்சியகம் மற்றும் வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் குழு, தமிழக தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் ஆகியவை இணைந்து, கல்லூரி வரலாற்றுத் துறை மாணவியர் 55 பேர், கிருஷ்ணகிரி மாவட்டம், மல்லசந்திரம் பாறையின்மீது அமைந்துள்ள கல்திட்டைகளைக் காண மரபுநடைப் பயணம் மேற்கொண்டனர். தமிழக தொன்மை இயல் ஆய்வு நிறுவன செயலர் கோவிந்தராஜ், மாணவியருக்கு மல்லசந்திரம் கல்திட்டைகளின் சிறப்புகள் குறித்து விளக்கினார்.

அப்போது அவர் கூறும்போது, தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கல்திட்டைகளைக் கொண்ட ஊர் மல்லசந்திரம். இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட கல்திட்டைகள் உள்ளன. இவை சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட இறந்த முக்கிய தலைவர்களின் நினைவாக எடுக்கப்பட்டதாகும். இவை இரும்புக்காலம் என்னும் பெருங்கற்படைக் கால பண்பாட்டைச் சேர்ந்தவைகளாகும். இந்த கல்திட்டைகளில் இருந்துதான் பிற்காலத்தில் நடுகற்கள் தோன்றின. பிற்கால கோவில்களின் கருவரை, திருச்சுற்று, பரிவார ஆலயங்கள், மதில் சுவர் ஆகிய கூறுகளை இக்கல்திட்டைகளில் காணமுடிகிறது. இக்கல்திட்டைகள் சிலவற்றில், வீரன் எவ்வாறு இறந்தான் என்பதை விளக்கும் வகையில் வெண் சாந்து ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலைகளில் உள்ள பாறைகளில் மட்டுமல்லாது கல் திட்டைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பது சிறப்பாகும் என்றார்.

இந்நிகழ்வில், அருங்காட்சியக காப்பாட்சியர் சிவக்குமார், அரசு மகளிர் கலைக்கல்லூரி பேராசிரியர்கள் கனகலட்சுமி, பரமகுரு, சௌபாக்கியா, மஞ்சுநாத், வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப் படுத்தும் குழு செயலர் தமிழ்செல்வன், பொருளாளர் விஜயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.




# அழைப்பு எண் 100 தொடர்பான பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு காண 14 இருசக்கர ரோந்து வாகனங்களை கிருஷ்ணகிரி எஸ் பி அவர்கள் துவக்கி வைப்பு

கிருஷ்ணகிரி, ஜன24-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், அவசர அழைப்பு எண் 100 தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணும் நோக்கத்துடனும், 14 இருச்சக்கர ரோந்து திட்டம் (24X7) ஊத்தங்கரை. சிங்காரப்பேட்டை, பர்கூர், கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி தாலுக்கா, காவேரிப் பட்டணம், ஓசூர் நகரம். அட்கோ, சிப்காட், சூளகிரி, தேன்கனிக் கோட்டை மற்றும் இராயக்கோட்டை ஆகிய காவல் நிலைய எல்லைகளில் தினமும் 24 மணி நேரமும் நேற்று 23.01.2026ம் தேதி முதல் காவல் துறை தலைவர், மேற்கு மண்டலம், கோவை அவர்களின் உத்தரவின் பேரில், மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை அவர்களின் தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டதின் மூலம் 100 அவசர அழைப்புகள். பெண்கள் பாதுகாப்பு. விபத்து, திருட்டு, சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்துதல் மற்றும் பொதுமக்களின் புகார்களுக்கு உடனடி நடவடிக்கை எடுப்பது ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அளிக்கும் 100 அவசர அழைப்புகளுக்கு குறுகிய நேரத்தில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உரிய நடவடி க்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பள்ளிகள், கல்லூரிகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள். சந்தைகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் குற்றச் சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் 24X7 இருசக்கர ரோந்து திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. பொதுமக்கள் காவல் துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுவதற்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



# இளையான்குடி பேரூராட்சி கூட்டம்: கிடப்பில் உள்ள குடிநீர் திட்டத்தை விரைந்து முடிக்க கோரிக்கை

இளையான்குடி, ஜன.24-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் நஜிமுதீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பேரூராட்சி செயலாளர் மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கவுன்சிலர் நாகூர் மீரா, பொதுமக்கள் சார்பாக பல்வேறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து பேசினார்.

ரூ.28 கோடி குடிநீர் திட்டம் முடக்கம்?

அம்ரூத் 2.ளி திட்டத்தின் கீழ் வைகை கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக திறந்தவெளி கிணறுகள் தோண்டும் பணி மற்றும் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். இது குறித்து அவர் பேசுகையில்:

"இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பேரூராட்சி நிர்வாகமோ அல்லது மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளோ முறையான நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. 28 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த பிரம்மாண்ட திட்டத்தைக் கைவிடும் நோக்கில் அதிகாரிகள் செயல்படுகிறார்களோ என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. எனவே, இளையான்குடியின் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்," என வலியுறுத்தினார்.

தரமற்ற சாலைப் பணிகள் மேலும், பேரூராட்சியில் குழாய்கள் பதிப்பதற்காகத் தோண்டப்பட்ட பள்ளங்களில் தற்போது மேற்கொள்ளப்படும் 'பேட்ஜ் ஒர்க்' (Patch work) கான்கிரீட் பணிகள் மிகவும் தரமற்ற முறையில் இருப்பதாகப் புகார் எழுந்தது. பெயரளவுக்குப் போடப்படும் இந்தக் கான்கிரீட், ஒரு சில நாட்களிலேயே பெயர்ந்து மீண்டும் பள்ளங்கள் உருவாவதாகக் கூறப்பட்டது. எனவே, பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பொறியாளர்கள் நேரில் சென்று ஆய்வு நடத்தி, சாலைப் பணிகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டும் என கவுன்சிலர் நாகூர் மீரா கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேரூராட்சி நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# வேலம்மாள் பள்ளியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்: ஓட்டுநர்கள், நடத்துநர்கள் உறுதிமொழி

சிவகங்கை, ஜன.24-

மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில், சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள லாடனேந்தல் வேலம்மாள் உறைவிடப் பள்ளியில் சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.





முக்கிய பங்கேற்பாளர்கள்

இந்த விழிப்புணர்வு முகாமில் பள்ளி மற்றும் கல்லூரியைச் சேர்ந்த ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக:

* வெங்கடேஷ், ஆய்வாளர், மானாமதுரை போக்குவரத்து காவல்துறை.
* ஜெயமாரி, சார்பு ஆய்வாளர்.
* ஸ்டீபன், கல்லூரி முதல்வர்.

ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்

நிகழ்ச்சியில் பேசிய காவல்துறை அதிகாரிகள், சாலை விதிகளைப் பின்பற்றுவதன் அவசியம், மிதமான வேகம் மற்றும் கவனச்சிதறல் இன்றி வாகனங்களை இயக்குவது குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினர்.

* பாதுகாப்பு உறுதிமொழி: நிகழ்ச்சியின் நிறைவாக, பள்ளிப் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் அனைவரும், "விபத்தில்லா பயணத்தை உறுதி செய்வோம்" மற்றும் "மாணவர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்போம்" என உறுதியுடன் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

* கலந்துரையாடல்: ஓட்டுநர்கள் சந்திக்கும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அவற்றைச் சரிசெய்யும் முறைகள் குறித்தும் இந்த முகாமில் ஆலோசிக்கப்பட்டது.

வேலம்மாள் கல்வி குழுமம் மற்றும் மானாமதுரை போக்குவரத்து காவல்துறை இணைந்து நடத்திய இந்த முன்னெடுப்பு, மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

# ஐந்து கட்சி தாவிய அம்மாவாசை என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை கீழ் தரமான நபர் என கடுமையாக சாடிய பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா

தாம்பரம், ஜன.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கத்தில் வருகிற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பாஜகவின் அடித்தளத்தை மேம்படுத்த மண்டல குழு ஆலோசனை கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் இன்று தாம்பரம் சட்டமன்ற தொகுதி மற்றும் பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் நடந்த மண்டல குழு ஆலோசனைக் கூட்டத்தில் பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா கலந்து கொண்டு தேர்தலில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது குறித்து ஆலோசனை நடத்தினார்.



இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா கூறுகையில்,

தேசிய ஜனநாயக கூட்டணியில் எனது நீண்ட நாள் நண்பர் டிடிவி தினகரன் இணைந்துள்ளார். தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் இன்னும் இரண்டு நாட்கள் தமிழ்நாட்டில் தங்கி இருந்து பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரச்சார பொதுக்கூட்டம் பணிகளை மேற்கொள்ள உள்ளார்.

திமுகவின் மனநிலை 1962 ஆம் ஆண்டுக்கு முன்னதாக இருந்தது போல் சென்று கொண்டிருக்கிறது. சட்டப்பேரவையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை பேச விடாமல் தடுத்து மைக்கை ஆப் செய்தது அநாகரியத்தின் உச்சம். மூன்று மாதத்திற்கு பிறகு சபாநாயகர் அப்பாவு எங்கே இருக்கப்போகிறார் அவருடைய மணல் கொள்ளை வழக்கு என்னவாகும் என்பதை நான் நியாபகப்படுத்த உள்ளேன். சட்டமன்றத்தில் சபாநாயகர் நடந்து கொள்ளும் லட்சணம் இது இல்லை, மேலும் அவர் அகம்பாவமாக பேசியது அனைவரும் கேட்டு உள்ளோம். அப்பாவுவின் நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்க நிலைக்குப் போய் உள்ளது.

ஆளுநர் ஆர்.என். ரவி சட்டமன்றத்தில் பேசுவதற்கு முன்பும் பின்பும் தேசிய கீதம் ஒளிக்க வேண்டும். தமிழ் தாய் வாழ்த்து அனைத்து சிறப்புடன் பாடிய பிறகு ஏன் தேசிய கீதம் பாடவில்லை இது தேசவிரோத பிரிவினைவாத எண்ணம் தான் காரணம். நிச்சயம் மக்கள் தக்க பாடத்தை திமுகவிற்கு புகட்டுவார்கள்.

தற்போதைய காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வ பெருந்தகை புரட்சி பாரதம், புதிய தமிழகம், பகுஜன் சமாஜ் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, எனத் தாவி பா. சிதம்பரத்தின் தயவால் காங்கிரஸிற்குள் நுழைந்தார். இவர் ஐந்து கட்சிகள் மாறி மனித குலத்திற்கு விரோதமாக நடந்து கொண்டு உள்ளார். செல்வம் பெருந்தகை ஐந்து கட்சி தாவிய அம்மாவாசை மிகவும் கீழ்த்தரமான ஒரு நபர். ஆடிட்டர் பாண்டியன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்.

நான் வருகிற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறானா இல்லையா என்று கட்சிதான் முடிவு செய்ய வேண்டும்.

அடுத்தவரின் வீட்டு ஜன்னலை எட்டி பார்க்கும் பழக்கம் எனக்கு கிடையாது இதனால் அடுத்த கூட்டணி குறித்து என்னால் பதில் கூற முடியாது. 36 ஆண்டுகள் நான் பாஜக கட்சியில் நிர்வாகியாக உள்ளேன் ஒருநாளும் நான் கூட்டணி பற்றி பேசியது கிடையாது.

தமிழ்நாடு இதுவரை இல்லாத அளவிற்கான ஒரு பிரம்மாண்ட பிரச்சார பொதுக்கூட்டத்தை தேசிய ஜனநாயக கூட்டணி நடத்த உள்ளது.

விஜயின் ஜனநாயக திரைப்படம் வெளிவராததற்கு மத்திய அரசு காரணம் இல்லை, விஜய் மத்திய அரசை குற்றம் சாட்டவும் இல்லை அன்று ஆட்சியில் இருந்த காங்கிரஸ் எதிர்த்து இந்தியை எதிர்த்து இந்திரா காந்தியை அரக்கியாக காண்பித்த பராசக்தி திரைப்படம் வெளியே வந்துள்ளது நாங்கள் ஒன்றும் அதற்கு குறுக்க நிற்கவில்லை.

இந்தப்படத்திற்கு தணிக்கை குழு இன்னும் அனுமதி தரவில்லை, தணிக்கை குழுவிடுமே இவர்கள் முறையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி இருந்தால் அதற்கு தீர்வு வந்திருக்கும்.

எனது நடிப்பில் வெளிவந்த கந்தன் மலை படம் வெளிவந்து ஒரு மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளது. இதைப் பற்றி தெரிவிக்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு கூறினார்.





# அம்பத்தூரில் ஸ்ரீ ஐயப்பா உற்சவம்

சென்னை, ஜன.24-

சென்னை அம்பத்தூர் கங்கை நகரில் உள்ள ஸ்ரீவாரி சேஷ பத்ம ஹாலில் 15.1. 2026 முதல் 18. 1. 2026 வரை தொடர்ந்து நான்கு நாட்கள் ஸ்ரீ ஐயப்பா உற்சவம் பகவான் நாம பிரச்சார மண்டலி சார்பாக மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிர்மால்ய தரிசனம், ஐயப்பன் பக்தவிஜயம், விளக்கு பூஜை, புக்ஷ்பாஞ்சலி, படி பூஜை ஆகியவை நடைபெற்றது. நான்காம் நாள் அன்று கற்பூர ஆழி ஹரிஹராசனம், மங்களம் பாடி இனிதாக முடிவுற்றது. தொடர்ந்து மூன்று நாட்களும் மிகச் சிறப்பான முறையில் அன்னதானம் நடைபெற்றது அம்பத்தூர் மஹிளா மண்டலி சிறப்பு ஏற்பாடுகளை செய்தனர். ஏராளமான ஐயப்ப பக்தர்கள் ஐயப்ப உற்சவத்தில் பங்கேற்று தரிசித்து மகிழ்ந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் B. N.P.M.டிரஸ்ட் ஸ்ரீ கோபி பாகவதர் ஸ்ரீ அம்பாசங்கர் ஸ்ரீ நரசிம்மன் ஸ்ரீ மகாலிங்கம் ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ லோகு மற்றும் அம்பத்தூர் ஐயப்ப சேவா சங்கம் ராமசாமி மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டு மிக சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்தனர்.

மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்புகள் செய்யப்பட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டது பக்தர்கள் ஐயனை தரிசித்து சாமியே சரணம் ஐயப்பா சாமியே சரணம் ஐயப்பா என்று பாடல் பாடி அய்யன் அருள் ஆசை பெற்றனர்.

# பொதுத்தேர்வு காலங்களில் தமிழ்ப் பாடம் படிக்கப் பள்ளிகளில் நேரம் ஒதுக்க வேண்டும்: தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

சென்னை, ஜன.24-

அரசுப் பொதுத்தேர்வு கால அட்டவணையில் மற்ற பாடங்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே, தமிழ்ப் பாடத்திற்கும் பள்ளிகளில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான கால அவகாசத்தை ஒதுக்க வேண்டும் எனத் தமிழ்நாடு தமிழாசிரியர் சங்கம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்துச் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் நீ. இளங்கோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசின் பொதுத் தேர்வு அட்டவணையில் தமிழ் மொழிப் பாடம் முதலாவதாக இடம் பெறுவது வரவேற்கத்தக்கது. இருப்பினும், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் போன்ற பாடங்களுக்கு இடையே மாணவர்கள் பள்ளியில் படிப்பதற்கு ஏதுவாக ஒன்று அல்லது இரண்டு நாட்கள் இடைவெளி விடப்படுகிறது. இந்த இடைவெளி நாட்களில் மாணவர்கள் பள்ளியில் ஆசிரியர்களின் மேற்பார்வையில் பாடங்களைப் படிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

ஆனால், தமிழ்ப் பாடம் பெரும்பாலும் திங்கட்கிழமைகளில் தேர்வு தொடங்கும் வகையில் அமைகிறது. இதனால் மாணவர்கள் பள்ளிகளில் அந்தப் பாடத்தைப் படிப்பதற்கான சூழல் இல்லாமல் போகிறது. பெரும்பாலான பள்ளிகளில் மற்ற பாடங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தமிழ்ப் பாடத்திற்கு வழங்குவதில்லை.


தற்போதைய சூழலில் அரசுப் போட்டித் தேர்வுகளில் தமிழ்ப் பாடம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, பொதுத்தேர்வு அட்டவணையில் தமிழ்ப் பாடத்திற்குரிய நாட்களில் மாணவர்கள் பள்ளியில் தங்கிப் படிக்க உரிய நேரத்தை வழங்க வேண்டும்.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாகப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்குப் பள்ளிக் கல்வித்துறை தெளிவான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி, தமிழ்ப் பாடத்திற்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப் படுவதை உறுதி செய்ய வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத் தப்பட்டுள்ளது.

# ஆசை வார்த்தை கூறி ஆன்லைன் மோசடி: இளம்பெண் கைது மாவட்ட காவல்துறை எச்சரிக்கை

கன்னியாகுமரி, ஜன.24-

சமூக வலைத்தளங்கள் மூலம் பெண்களின் புகைப்படங்களைக் காட்டி, உல்லாசமாக இருக்கலாம் என ஆசை வார்த்தை கூறி பண மோசடியில் ஈடுபட்டு வந்த இளம்பெண்ணை சைபர் கிரைம் போலீசார் கைது செய்துள்ளனர்.




மோசடி பின்னணி:

பேஸ்புக் (Facebook) போன்ற சமூக வலைத்தளங்களில் போலி கணக்குகளை உருவாக்கி, அதில் பெண்களின் புகைப்படங்களைப் பதிவிட்டு ஆபாச உரையாடல்களுக்கும், உடலுறவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் கொடுக்கப்பட்டிருந்த வாட்ஸ்அப் எண்ணைத் தொடர்பு கொண்டவர்களிடம் பேசிய பெண் ஒருவர், இளம்பெண்களுடன் உல்லாசமாக இருக்கலாம் என்றும், ஆபாச வீடியோ கால் பேசலாம் என்றும் ஆசை வார்த்தைகளை கூறியுள்ளார். இதனை நம்பி முன்பணம் கட்டிய பலரிடம் லட்சக்கணக்கில் பணம் பறித்துவிட்டு, பின்னர் அந்த பெண் அழைப்புகளைத் தவிர்த்து மோசடி செய்து வந்துள்ளார்.

காவல்துறை நடவடிக்கை:

இந்த மோசடி தொடர்பாகப் பாதிக்கப்பட்ட நபர் அளித்த புகாரின் பேரில், குற்றவாளியைக் கண்டறிந்து உடனடியாகக் கைது செய்ய கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R. ஸ்டாலின் IPS உத்தரவிட்டார். அவரது உத்தரவின்படி, சைபர் கிரைம் போலீசார் தீவிர விசாரணையில் இறங்கினர்.

குற்றவாளி கைது:

போலீசாரின் தொழில்நுட்ப ரீதியிலான விசாரணையில், இந்த மோசடியில் ஈடுபட்டது ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பகுதியைச் சேர்ந்த முகமது ஷாஜகான் என்பவரது மகள் நபிலா பேகம் (27) என்பது தெரியவந்தது. அவரைத் தேடிப் பிடித்து கைது செய்த போலீசார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

காவல்துறை எச்சரிக்கை:

இது போன்ற ஆன்லைன் மோசடிகள் குறித்து மாவட்ட காவல்துறை சார்பில் விடுக்கப் பட்டுள்ள எச்சரிக்கையில்:

"சமூக வலைதளங்களில் பெண்களின் படங்களைக் காட்டி ஆசை வார்த்தை கூறி பணம் பறிக்கும் ஆன்லைன் தொழில்முறை மோசடிகள் அதிகரித்து வருகின்றன. அடையாளம் தெரியாத நபர்களின் ஆபாச உரையாடல்களையோ அல்லது அழைப்புகளையோ நம்பி பொதுமக்கள் யாரும் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுத் திட்ட சமூகத் தணிக்கை மற்றும் பள்ளிக் குழுக் கூட்டம்

மானாமதுரை, ஜன. 24-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்' கீழ் சமூகத் தணிக்கை நடைபெற்றது. கடந்த 19/01/26 முதல் 23/01/26 வரை நடைபெற்ற இந்தத் தணிக்கையைத் தொடர்ந்து, இதற்கான பள்ளிக் குழுக் கூட்டம் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.





இந்தக் கூட்டத்தில் பின்வரும் அதிகாரிகள் மற்றும் முக்கியப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்:

* மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லட்சுமணன்
* சமூகத் தணிக்கை வட்டார வள அலுவலர் முருகானந்தம்
* மேலநெட்டூர் ஊராட்சிச் செயலாளர் வே. நாகேஸ்வரி
* சத்துணவு அமைப்பாளர் S. கெங்கேஸ்வரி -

இவர்களுடன் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பள்ளியின் தலைமையாசிரியர் பாலகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சத்துணவுத் திட்ட தணிக்கை அறிக்கை வாசிக்கப்பட்டு முறைப்படி ஒப்புதல் பெறப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161